**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 243/2021**

**Prosecution witness : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராசைய்யா | Caste | : |
| Father 's Name | : சீனி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**09.06.2023**

**முதல் விசாரணை**

நான் திருத்தங்கல்லில் குடியிருந்து வருகிறேன். நான் பிஎஸ்என்எல் அலுவலகத்தில் டெக்னிசியனாக பணி செய்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். விபத்தில் இறந்து போன அருண் எனது 2 வது மகன் ஆவார். கடந்த 12.01. 2016 அன்று காலை 8.30 மணியளவில் யாரோ ஒரு நபர் என் மகன் அருனின் போனில் இருந்து எனக்கு போன் செய்து பெருங்குடி காவல் நிலையத்திலிருந்து சிறிது தொலைவு தள்ளி உள்ள பெட்ரோல் பல்க் அருகே விபத்து ஏற்பட்டு எனது மகன் அருணுக்கு வலது காலில் அடியும் நெத்தியில் காயமும் ஏற்பட்டுள்ளதாக கூறினார். சிறிது நேரம் கழித்து ஆம்புலன்சுக்கு போன் செய்து எனது மகனை லட்சுமணா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளதாக கூறினார். நாங்கள் உடனே கிளம்பி சென்று நான் எனது மகனை லட்சுமணா மருத்துவமனையில் சென்று பார்த்த போது அவர் மயக்க நிலையில் இருந்தார். பின்பு 14.01.2016 அன்று நாங்கள் எனது மகனை மேல் சிகிச்சைக்காக மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். சிகிச்சையில் இருந்த அவர் சிகிச்சை பலனின்றி அவர் மறுநாள் 15.01.2016 அன்று இறந்துவிட்டார். விபத்து நடந்தது தெரிந்தவுடன் பெருங்குடி காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். மேற்படி புகார் அ.சா.ஆ. 1 ஆகும். எனது மகன் விபத்து அன்று ஜவுளி எடுப்பதற்காக அவரது நண்பன் உதயன் என்பவருடன் சேர்ந்து இருசக்கர வாகனத்தில் மதுரை ரிங் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக சென்று கொண்டிருந்த போது கிழக்கிலிருந்து மேற்காக வந்த டேங்கர் லாரி வந்து மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டேன். டேங்கர் லாரியை ஓட்டியவர் மாசானம் என தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு,வி.**

நான் என் மகனை லட்சுமணா மருத்துவமனையில் வைத்து பார்த்தேன். நான் காவல் நிலையத்தில் அருகில் இருந்தவர்களிடம் விசாரித்து தெரிந்து கொண்டு விபரம் கூறினேன். காவல் நிலையத்தில் போலிசார் புகார் எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அந்த புகார் தான் அ.சா.ஆ. 1 ஆகும்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 243/2021**

**Prosecution witness : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்துலட்சுமி | Caste | : |
| Father 's Name | : ராசைய்யா | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)
**09.06.2023**

**முதல் விசாரணை**

நான் திருத்தங்கல்லில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்து போன அருண் எனது 2 வது மகன் ஆவார். கடந்த 12.01.2016 அன்று காலை 8.30 மணியளவில் யாரோ ஒரு நபர் என் மகன் அருனின் போனில் இருந்து எனது கணவர் அ.சா.1 க்கு போன் செய்து பெருங்குடி காவல் நிலையத்திலிருந்து சிறிது தொலைவு தள்ளி உள்ள பெட்ரோல் பல்க் அருகே விபத்து ஏற்பட்டு எனது மகன் அருணுக்கு வலது காலில் அடியும் நெத்தியில் காயமும் ஏற்பட்டுள்ளதாக கூறினார். சிறிது நேரம் கழித்து ஆம்புலன்சுக்கு போன் செய்து எனது மகனை லட்சுமணா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளதாக கூறினார். நாங்கள் உடனே கிளம்பி சென்று நான் எனது மகனை லட்சுமணா மருத்துவமனையில் சென்று பார்த்த போது அவர் மயக்க நிலையில் இருந்தார். பின்பு 14.01.2016 அன்று நாங்கள் எனது மகனை மேல் சிகிச்சைக்காக மீனாட்சி மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். சிகிச்சையில் இருந்த அவர் சிகிச்சை பலனின்றி அவர் மறுநாள் 15.01.2016 அன்று இறந்துவிட்டார். விபத்து நடந்ததது தெரிந்தவுடன் பெருங்குடி காவல் நிலையத்தில் எனது கணவர் புகார் கொடுத்தார். எனது மகன் விபத்து அன்று ஜவுளி எடுப்பதற்காக அவரது நண்பன் உதயன் என்பவருடன் சேர்ந்து இருசக்கர வாகனத்தில் மதுரை ரிங் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்காக சென்று கொண்டிருந்த போது கிழக்கிலிருந்து மேற்காக வந்த டேங்கர் லாரி வந்து மோதி விபத்து ஏற்பட்டதாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி**

நான் லட்சுமணா மருத்துவமனையில் வைத்து என் மகனை பார்த்தேன். மற்ற விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது.